கமும் பிரச்சாரம் செய்தது. ஆகவே, பரவலாக எல்லோருக்குமே கோதுமை கிடைக்க அரசு வழிவகை செய்யுமா என அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: சர்க்கரை வியாதி இல்லாதவர்கள் கோதுமை வாங்குவதாக கனம் உறுப்பினர் அவர்கள் தெரிவிப்பதுபோல் தெரிகிறது. அப்படி யார், யார் வாங்குகிறார்கள் என்று சொன்னால், நிறுத்தி விடுகிறேன். கோதுமை சாப்பிட்டால், சர்க்கரை வியாதி வராது என்று யார் சொன்னார்கள், எந்த மருத்துவர்கள் சொன்னார்கள் என்று தெரியவில்லை. அப்படியென்றால், கோதுமை ரொம்ப சாப்பிட்டு, சர்க்கரை வியாதிக்காரர்கள் தேறியிருப்பார்கள். உறுப்பினர் அவர்கள் கோதுமை சாப்பிட்டால், சர்க்கரை வியாதி வராது என்று கூறுவது போல் தெரிகிறது. அந்த மாதிரி மருத்துவ ஆராய்ச்சி இருப்பதாகத் தெரியவில்லை.

திரு. ஏ. சுப்பிரமணியம்: கோதுமை மொத்த வர்த்தகத்தை அரசு கைவிட்டதற்குப் பிறகு, இந்த மாநிலத்தினுடைய தேவைக்கேற்ற அளவுக்கு கோதுமை பெற, அரசு என்ன முயற்சி எடுத்துக் கொண்டிருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: எந்த மத்திய அமைச்சரைக் கேட்க வேண்டுமோ, அந்த மத்திய அமைச்சரை அரசு கேட்டுக்கொண்டிருக்கிறது, தந்தி கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆனால், அவர்களிடமிருந்து கிடைக்கவில்லை. கனம் உறுப்பினர் அவர்கள் அதற்காக ஏதாவது முயற்சி செய்தால் நன்றாக இருக்கும்.

திரு. என். கே. பழனிசாமி: கோதுமை பெற, ரேஷன் அதிகாரியிடமும் சர்டிபிகேட் வாங்கவேண்டும், டாக்டரிடமும் சர்ட்டிபிகேட் வாங்கவேண்டும், டையபெட்டிக் பேஷண்ட் என்று. 40 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு டையாபெட்டிக் கம்பிளெயின்ட் வந்துவிடுகிறது. அதில் ஒரு டிகிரி ஜாஸ்தியாக இருக்கலாம், அல்லது கம்மியாக இருக்கலாம். ஆகவே, 40 வயதுக்கு மேற்பட்ட எல்லோருக்கும் கோதுமை கொடுக்க அரசு முயற்சிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: 40 வயதுக்கு மேற்பட்டவர்களைக் கனம் உறுப்பினர் அவர்கள் பயமுறுத்துகிறார்கள். (சிரிப்பு) 40 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு வரும் என்ற கணக்கே கிடையாது. எனக்கு 52 வயது வரையிலும் டையபெட்டிஸ்

[1974 ஏப்ரல் 3]

கிடையாது. 30 வயது உள்ளவர்களுக்குக் கூட, டையபெட்டிஸ் வந்துவிடுகிறது. (குறுக்கீடு) இப்பொழுது இருக்கிறது. ஆகவே, வயதைப் பொறுத்து டையபெட்டிஸ் இருக்கிறது என்ற நிலைமையே கிடையாது என்று சொல்லிக்கொள்கிறேன்.

உணவுப்பொருள் வழங்கல் கழக டிரைவர்கள் முதலியோர்

* 733. வினா—திரு. கா. வேழவேந்தன் : மாண்புமிகு உணவு-கூட்டுறவுத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மாநில உணவுக் கார்ப்பரேஷனில் பணியாற்றும் லாரி டிரைவர்கள், கிளீனர்கள் ஆகியோர் 10—8—72 அன்று உணவு அமைச்சரிடம் கோரிக்கைகள் அடங்கிய மனு ஏதேனும் கொடுத்துள்ளனரா?

(இ) ஆம் எனில், அக்கோரிக்கைகளுக்குள் எவையெவை நிறைவேற்றப்பட்டுள்ளன?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : (அ) ஆம்.

(இ) அக்கோரிக்கைகள் அரசின் பரிசீலனையில் உள்ளன.

திரு. கா. வேழவேந்தன் : தலைவர் அவர்களே, இந்த உணவு வழங்கு துறையிலே பல்லாண்டுகாலம் பணியாற்றுகிற லாரி டிரைவர்ஸ், கிளீனர்ஸ், இப்பொழுது அந்த லாரிகளை வேறு துறைகளுக்கு விற்கிற காரணத்தால் வேலை இழக்கிற சூழ்நிலையிலே இருக்கிறார்கள். அவர்களது முன்னாள் கோரிக்கைகூட, மாற்று வேலைகள் தங்களுக்குத் தரப்படவேண்டும், அல்லது போக்குவரத்துத் துறைக்காவது அனுப்பப்பட வேண்டுமென்பது. ஆகவே, அவர்களது கோரிக்கைகள் கவனிக்கப்படுமா என்று அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : கனம் உறுப்பினர் அவர்கள் கேட்பது, லாரிகளை விற்றுவிட்டபிறகு. சென்னை போலீஸ் கமிஷனரிடம் 4 லாரிகள் கொடுத்திருக்கிறோம், சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷனுக்கு 4 லாரிகள் கொடுத்திருக்கிறோம், மெட்ராஸ் புட் செல்லுக்கு, பட் டிபார்ட்மெண்டில் இருக்கிற போலீஸ் துறைக்கு 3 லாரிகள் கொடுத்திருக்கிறோம். நாங்கள் 4 வைத்திருக்கிறோம். போலீஸ் கமிஷனருக்கு கொடுத்துள்ள 4 லாரிகளுக்கு 4 லாரி டிரைவர்களை அனுப்பினோம். அது போல், சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷனுக்கு கொடுத்திருக்கிற 4 லாரிகளுக்கு 4 டிரைவர்களைப் போகச்